RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt224s1927

OPEN ACCESS

# சமுதாய மறுமலர்ச்சிக்கு வள்ளலார் காட்டும் அறக்கோட்பாடுகள்

ச. காஞ்சனா [அ, *], இரா. மூர்த்தி [அ]

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் வித்யாலய கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்-641020, தமிழ்நாடு, இந்தியா

# Vallalar's Ethical Principles for Social Renaissance

S. Kanchana [a, *], R. Moorthy [a]

[a] Department of Tamil, Ramakrishna Mission Vidyalaya, Coimbatore-641020, Tamil Nadu, India

* Corresponding Author: kanchanasadagopan@gmail.com

Received: 11-08-2022
Revised: 26-09-2022
Accepted: 14-10-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

Even if they are capable of doing all things by infinite divine power, the attainment of perfection by living beings is designed to be self-contained, to lose itself, to hate itself, and to desire that every living being desires to receive its own ascents. There are moral scriptures to give us a shoulder in that endeavour. Thus, there is a lot of evidence that Vallalar has explained clearly in the six Thirumarais of Thiruvarutpa the ethical ideas of Vallalar, which indicates that it is very good to have a renaissance in the society if morality is followed in the way of life of the individual. Such ethical principles can be seen in detail in the article.

**Keywords:** Vallalar, Divine, Morality, Ethics

## முன்னுரை

மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க கூறுகளின் தொகுப்பே அறம் என்று கூறுவர். "பிறவிதோறும் மனிதனைப் பற்றிக்கொண்டு வரும் தீவினையை அறுத்தெறிவதே அறம்" என்ற ஆன்மீக விளக்கமும் திருக்குறள் - நீதி இலக்கியத்தில் உண்டு. தனிமனிதனின் நற்செயல்களும் தீய செயல்களும் அவனது எண்ணங்களை அடிப்படையாகக் கொண்டே நடைபெறுகின்றன.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன் ஆகுல நீர பிற", என்னும் திருவள்ளுவரின் வாக்கிற்கு ஏற்ப மனதினை தூய்மையாக வைத்திருப்பதே மனித வாழ்வின் முக்கிய அறமாகக் கருதப்படுகிறது. இத்தகைய அறக்கருத்துக்களைத் திருவருட்பாவின் ஆறு திருமுறைகளிலும் தெள்ளத் தெளிவாக வள்ளல் பெருமான் விளக்கியுள்ளார் என்பதற்கு பல்வேறு சான்றுகள் உள்ளன அத்தகைய அறக்கோட்பாடுகளை கட்டுரையில் விரிவாகக் காணலாம்.

## அறம் - விளக்கம்

"நல்லவை செய்தலும் அல்லவை கடிதலும்" அறம் என்று பொருள்படும்.

அறம் என்ற சொல்லானது அறுத்தல் என்ற வினைச்சொல்லினை அடிப்படையாகக்கொண்ட ஒரு சொல்லாகும் (அறு+அம்=அறம்).

அறு+அம்=அறம்.

எவற்றை அறுக்க (விட்டொழிக்க) வேண்டும். இதோ வள்ளுவனே கூறுகின்றார்.

"அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்

இழுக்கா இயன்றது அறம்."

அதாவது அழுக்காறு (பொறாமை), அவா (பேராசை), வெகுளி (சினம்), இன்னாச்சொல் (கடுஞ்சொல்) ஆகிய நான்கையும் அறுப்பதே அறம் (Goumareeswari, 2002).

## வள்ளலார் இராமலிங்க அடிகளாரின் அறச் சிந்தனை

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், இவ்விருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் சைவ சமயத்தில் பல சீர்திருத்தங்கள் தோன்றின (Vijayakumar, 2021; Gunapalasingam et al., 2022). இத்தகைய சீர்திருத்தச் சைவம் தோன்றற்குக் காரணம் வள்ளல் பெருமானே எனலாம். தமிழ்நாட்டில் பொதுமக்களுக்கு முதன் முதலாகத் திருக்குறள் வகுப்பு நடத்தியவர் இவரே.

தமிழ்நாட்டில் முதன்முதலாக முதியோர் கல்வியை ஏற்படுத்தியவர் இவரே. மும்மொழி பாடசாலை (தமிழ், வடமொழி, ஆங்கிலம்) நிறுவியவர் இவரே. தமது கொள்கைக்கு ஒரு தனி மார்க்கத்தை உருவாக்கி அதற்கென தனிக்கொடி, தனி மந்திரம், தனிச்சபை அமைத்தவர் இவரே. அடிகளாரின் தோற்றத்திற்குப் பின் சமயத்துறையில் மட்டுமின்றிச் சமூக வாழ்விலும் பெரும் மாறுதல்களும் சீர்திருத்தங்களும் ஏற்பட்டன (Gurunathan & Santhakumari, 2021; Roopa, 2021). இவ்வாறு தனிப்பெரும் சாம்ராஜ்ஜியம் நிறுவி அறக் கருத்துக்களை மக்களிடையே பரப்பி அறியாமை இருள் நீங்க வழிவகை செய்தார் என்பதை விளக்கும் முழுமையான நூல் எனலாம்.

## வள்ளலார் உபதேசித்த சன்மார்க்கப் பெருநெறி ஒழுக்கம்

1. இந்திரிய ஒழுக்கம் 2. கரண ஒழுக்கம் 3. ஜீவ ஒழுக்கம் 4. ஆன்ம ஒழுக்கம் ஆகும். இந்திரிய ஒழுக்கம்: இந்திரியங்களாகிய பொறி புலன்களை ஒழுங்குபடுத்துதல். கரண ஒழுக்கம்: அந்தக் கரணமாகிய மனம் முதலியவற்றை ஒழுங்குபடுத்துதல். ஜீவ ஒழுக்கம்: மக்கள் அனைவரையும் தன்னை போல் பாவித்து ஒழுகுதல். இது தான் இன்று பேசப்பெறும் மனித நேயம், மனித உரிமை என்பதைக் கடைப்பிடிக்க வழி வகுக்கும் ஒன்று. ஆன்ம ஒழுக்கம்: எல்லா உயிர்களையும் தன்னைப்போல் பாவித்து ஒழுகுதல். அனைத்து உயிர் நேயம் ஆன்ம உரிமை (உயிர் உரிமை) என்பதைக் கடைப்பிடிக்க வழி வகுக்கும் ஒன்று. இத்தகைய ஒழுக்க நெறிகள் அறவழியில் நாம் பயணிக்கப் பெரிதும் துணை நிற்க வள்ளலார் வகுத்த வழிமுறைகள் ஆகும்.

## தன்னிலை ஆராய்ச்சி

நமது மனம் எதன் மீது அதீத பற்றுக் கொண்டு பயணிக்கிறதோ அதன் சாயலே செயல்களின் விளைவாக அமைகின்றன. நம்மைப் பற்றி நாமே அறியாத, கவனித்திராத பல குணங்களும் நமக்குள்ளே மண்டி கிடக்கும். இவற்றை முதலில் தன்னிலை ஆராய்ச்சி செய்து பட்டியலிடச் சொல்கிறது திருவருட்பா. அவ்வாறு கண்டுணர்ந்தவற்றை முழு மனதுடன் ஏற்கவும், அதனை மாற்றியமைக்கவும் நம் மனதிற்கு ஊக்கம் அளிக்கிறது. இதனை,

"காமவுட் பகைவனும் கோபவெங் கொடியனும்

கனலோப முழு மூடனும்

கடுமோக வீணனும் கொடுமதமெ னும் துட்ட

கண் கெட்ட ஆங்காரியும்

ஏமமறு மாச்சரிய விழலனும் கொலை யென்

றியம்பு பாதகனுமாம் இவ்

வெழுவரும் இவர்க்குற்ற வுறவான பேர்களும்

எனைப்பற் றிடாம லருள்வாய்"

இவ்வரிகளே நம் மனதில் எவை யெல்லாம் பற்றிடாமல் காக்க வேண்டும் என்பதற்கு வள்ளல் பெருமான் கூறும் அற்புத விளக்கமாகும் (Ramalinga Swamigal, 2019).

## ஒவ்வொரு மனிதனும் தவிர்க்க வேண்டிய ஏழு வகையான எதிரிகள்

மனிதன் தன்னுடைய வாழ்வில் தவிர்க்க வேண்டிய ஏழு வகையான எதிரிகள் உள்ளன. அவையானவன, 1. காமம், 2. கோபம், 3. லோபம், 4. மோகம், 5. மதம், 6. மாச்சரியம், 7. அகங்காரம். வள்ளல் பெருமானின் கூற்றுப்படி இந்த ஏழு எதிரிகளைத் தனி மனித வாழ்வில் சரிவர கையாளப் பழகிக் கொண்டால் நற்குணங்களின் பிறப்பிடமாக அனைவரும் மாறிவிடுவோம் என்பதில் சிறிதும் ஐயமில்லை எனலாம்.

### காமம்

காம உணர்வு என்பது இயற்கையான ஒன்றே. எதிலும் அளவோடு இருத்தல் சிறப்பு. காம உணர்வை அளவிற்கு அதிகமாக எடுத்துக்கொள்ளும் போது பலவிதமான இன்னல்களுக்கு ஆளாக நேரிடும்.

"கொடிய மாதர்கள் இடையுறும் நரகக்

குழியில் என் தனைக் கொண்டு சென்றழுத்திக்

கடிய வஞ்சனை யால் எனைக் கலக்கம்

கண்ட பாவியே காம வேட்டுவனே

இடிய நெஞ்சகம் இடர் உழந்திருந்தேன்

இன்னும் என்னை நீ ஏன் இழுக்கின்றாய்"

பூங்கொடியின் இயல்புடைய மங்கையரின் இடைப்பகுதியாக நரகக் குழியில் என்னைக் கொண்டு போய் விழுத்தி அஞ்சத்தக்க வஞ்சத்தினால் அறிவை கலங்கச் செய்த பாவியான காம வேட்டுவனே! இன்று காம உணர்வை வன்மையாக இப்பாடலில் கண்டிக்கிறார் (Ramalinga Swamigal, 2019).

### கோவம்

கோவம் ஒரு கொடிய மிருகம். அது வளர்ப்பவர்களையே அழிக்கும். கோபமும் புயல் போன்றது தான் அது அடங்கிய பின் தான் தெரியும், அதனால் அடைந்த நஷ்டம் எவ்வளவு என்று.

"கோவம் என்னும் ஓர் கொலைப்புலைத் தலைமைக்

கொடியனே எனைக் கூடி நீ நின்ற

பாவ வன்மையால் பகை அடுத்துயிர் மேல்

பிரிவிலாமலே பயன் இழந்தனன் காண்"

சினம் என்று சொல்லப்படும் கொலைக்குரிய புலைத் தன்மையில் தலைமையுடைய கொடியவனே! என்னுடன் நீ கூடி நின்றதால் ஏற்பட்ட பாவ வன்மையால் உயிர்களிடம் காட்ட வேண்டிய அன்பு இன்றி நல்ல பயன்களை இழந்தேன். ஆகையால் பிடிவாதம் செய்யாமல் அகன்று போவாய் என்று கோவ உணர்வை இப்பாடலில் கண்டிக்கிறார் (Ramalinga Swamigal, 2019).

## லோபம்

லோபம் என்பது சுயநலம் பேராசை என்பதைக் குறிக்கும். பிறரைப் பற்றிச் சிந்திக்காமலும், இரக்கம் என்பதே இல்லாமலும், சுயநலத்துடன் பொருள்களைச் சேர்த்துவைத்து அழகு பார்ப்பதும், கஞ்சத்தனமும், எல்லாவற்றையும் தானே அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணமும், தீய வழியில் பொருள்களைச் சம்பாதிக்கக் கூடிய நோக்கமும், வஞ்சனை செய்து, பிறர் பொருளை அபகரித்துத் தானே வாழ நினைக்கும் குணமும், எப்பொழுதும் தன் பொருள்களைப் பற்றுடன் பாதுகாப்பதும் எல்லாம் சுயநலமே.

"சார்ந்த லோபமாம் தயையிலி ஏடா

தாழ்ந்திரப்பவர் தமக்கணு அதனுள்

ஈர்ந்த ஒன்றினை ஈயவும் ஒட்டாய்

இரக்கின்றோ தரின் அதுகொளற் கிசைவாய்

சோர்ந்திடாது நான் துய்ப்பவும் செய்யாய்

சுகமிலாத நீ தூர நில் இன்றேல்

சினத்தைச் சார்ந்த லோபம் என்ற தயவுப் பண்பு இல்லாத கீழானவனே! தலையானது காலில் படத் தாழ்ந்து யாசிக்கும் மக்கட்கு அணுவில் அறிந்து கூறிட்ட ஒன்றைக் கொடுப்பதற்கு இசையாய். அவ்வளவு உடைய ஒன்றை இரப்பவரே நினக்குத் தரின் அதனை மாறாது வாங்கிக் கொள்வதற்கு இசைக்கின்றாய்! என்னிடம் உள்ளதையும் தளராது நான் உண்பதற்கு என்னுடன் சம்மதிக்கின்றிலை. வாழ்வில் சுகம் பயவாத நீ என்னை விட்டு நீங்கித் தொலைவில் நிற்பாயாக! என்று லோப உணர்வை வன்மையாக இப்பாடலில் கண்டிக்கிறார் (Ramalinga Swamigal, 2019).

## மதம்

மதம் என்பது கர்வம் (ஆணவம்). ஒருவரையும் மதிக்காத மமதையோடு இருக்கும் நிலை. எதையும் தான் ஒருவரால் மட்டுமே சாதிக்க முடியும் என்ற கர்வம் கொள்ளச் செய்யும். தான் என்னும் அகந்தையால் திமிர் பிடித்து அலைவதும் உண்டு. ஆணவ நெறியால் யாவரையும் துன்பப் படுத்தித் தான் மகிழ்ச்சி அடைவதும் உண்டு.

"மதம் எனும் பெரு மத்தனே எனை நீ

வருத்தல் ஓதினால் வாயினுக் கடங்கா

இதம மறிந்தனம் எமக்கினி ஒப்பார்

யாவர் என்றெனை இழிச்சினை"

மதம் என்ற பெரிய உன்மத்தனே என்னை நீ அடைந்து வருத்துவதைச் சொன்னால் சொல்லில் அடங்காது. இனி எனக்கு ஒப்பாவார் வேறு எவர் இருக்கின்றார் என்று என்னைக் கீழ்மை அடையச் செய்தாய் என்று மதத்தை சாடி இப்பாடலில் பாடியுள்ளார் (Ramalinga Swamigal, 2019).

## மோகம்

ஒன்றின் மேல் அல்லது ஒருவரின் மேல் ஏற்பட்ட விருப்பம் அதிலிருந்து அல்லது அவரிடம் இருந்து விடுதலைப் பெற முடியாத வண்ணம் உடும்பு பிடியாகி இருக்கும்போது அது காதல் இல்லை அன்பு இல்லை பற்றி இல்லை மோகம் மட்டுமே சொந்த மனையை மறக்கடிக்கச் செய்த மோகந்தான் கோவலனைப் பாழ்படுத்தியது. கண்ணகியைக் கலங்கடித்தது. பணம், பதவி, மண், பெண், பெயர், புகழ், தவறான பழக்கங்கள் என பலவற்றின் மேல் ஏற்படுகின்றன மோக உணர்வைக் கவனமாகக் கையாள வேண்டும்.

“மோகம் என்னும் ஓர் மூடரில் சிறந்தோய்

முடிவி லாத்துயர் மூலஇில் ஒழுக்கில்

போகம் என்னும்ஓர் அளற்றிடை விழவும்

போற்று மக்கள் பெண் டன்னைதந் தையராம்

சோக வாரியில் அழுந்தவும் இயற்றிச் சூழ்கின்றாய்”

மோகம் என்பது மூடத்தனம் எனவும் முடிவே இல்லாத துயரை அள்ளி வழங்கும் எனக் கூறி அதனை மிகப்பெரிய எதிரியாக இப்பாடலில் கண்டிக்கிறார் (Ramalinga Swamigal, 2019).

## மாச்சரியம்

மாச்சரியம் என்பது பொறாமை. பிறர் வாழ்வதைக் கண்டு பொறுக்க முடியாமல் வேதனைப்படுவது, எந்த நேரமும் நாம் நல்லபடியாக இல்லையே என்று தன்னையே நொந்து கொள்வது, எல்லாரும் சுகமாக இருக்கின்றார்களே, இவர்கள் எப்பொழுது கஷ்டப் படுவார்கள் என்று எண்ணுவது, இவை அனைத்தும் மாச்சரியம். தான் மட்டும் சுகமாக இருக்கவேண்டும் என்பதே எண்ணமாக இருக்கும். பிறரைப் பார்க்கும் பொழுது தீய எண்ணங்களுடன் பெருமூச்சு விடத் தோன்றும்.

## ஏமமறு மாச்சரிய விழலனும் கொலை யென்

‘றியம்பு பாதகனுமாம்’ இவ்வாறாக பொறாமை என்னும் உணர்வை ஒன்றுக்கும் உதவாத ஒன்றாகவே கருதி அதனை விட்டொழிக்க வேண்டுகிறார் (Ramalinga Swamigal, 2019).

## அகங்காரம்

அனைத்தும் தனக்கு நன்றாகவே தெரியும். தான் செய்வதே சரி என்று தன்னைத்தானே பெருமிதமாக நினைத்து தற்பெருமைக் கொள்ளும் குணத்தால் ஒரு பயனும் இல்லை என்கிறார் வள்ளல் பெருமான்.

“கருமையாம் அகங்கார மர்க் கடவா

கடையனே உனைக் கலந்ததனாலே

அருமையாக நாம் பாடினோம் கல்வி

அற அறிந்தனம் அருமையும் அடைந்தோம்

இருமை இன்பமும் பெற்றனம் என்றே

எனை மதித்து நான் இழிவடைந்தனன் காண்

ஒருமை ஒற்றியூர்ச் சிவன் அருள் வாளால்

உன்னை வெட்டுவல் உண்மை என்றுணரே”

கருமைப் பண்புடைய அகங்காரம் என்ற குரங்கான கடையனே! உன்னுடன் கலந்ததால் நாம் அருமையாகப் பாடுகின்றோம், கல்வியை முற்றக்கற்றோம், திருவருளையும் பெற்று விட்டோம், உரிமைக்குரிய இன்பமும் அடைந்துள்ளோம், என்று என்னை யானே வியந்தேன்! இழிந்தேன் என்று அறிக! ஒருமை நலம் வாய்ந்த திரு ஒற்றியூரில் வீற்றிருக்கின்ற சிவபெருமானின் திருவருளான ஞானவாளைக் கொண்டு உன்னை வெட்டுவேன். இதனை உண்மை என்று அறிக (Ramalinga Swamigal, 2019).

இவ்வாறு விளக்கிக் கூறப்பட்டுள்ள ஏழு எதிரிகளை நாம் நீக்கியே தீர வேண்டும் என்கிறார் வள்ளல் பெருமான். அறநெறியில் நின்று நிலை பெற்று வாழ இறைவனிடத்தில் இப்படித்தான் நம் வழிபாடு அமைய வேண்டும் என்று எடுத்துக்காட்டியுள்ளார்.

“ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற

உத்தமர்தம் உறவு வேண்டும்

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்

உறவு கலவாமை வேண்டும்

பெருமை பெறும் நினது புகழ் பேச வேண்டும் பொய்மை

பேசா திருக்க வேண்டும்

பெருநெறி பிடித்தொழுக வேண்டும்

மதமான பேய் பிடியா திருக்க வேண்டும்

மருவு பெண்ணாசையை மறக்கவே வேண்டும் உனை

மறவா திருக்க வேண்டும்” (Ramalinga Swamigal, 2019)

## நீதி மற்றும் நடுவுநிலைமை

வள்ளலாரின் மனுமுறை கண்ட வாசகம் என்ற தொகுப்பில் மனுநீதிச் சோழன் நீதி கேட்டு வந்த பசுவிற்காக தன் புதல்வனான வீதிவிடங்கனை தேர்க்காலில் ஏற்றி அக்கன்று போல் மாய்த்துக் கொல்ல ஆணை பிறப்பித்தமைக்கு நிகரான நடுவு நிலைமையை வேறு எங்கும் காண இயலாது எனலாம். நீதி தவறாமல் நாம் வாழ வேண்டும் என்பதற்குச் சான்றாகும். இதனை,

"நல்லோர் மனத்தை நடுங்கச் செய்தேனோ!

நட்டாற்றிற் கையை நழுவவிட்டேனோ!"

"ஆசைக்காட்டி மோசஞ் செய்தேனோ!

கோள் சொல்லிக் குடும்பங் குலைத் தேனோ!"

என்ன பாவம் செய்தேனோ இன்னதென்றறியேனே” என நீதியை நிலை நிறுத்த வேண்டியதின் முக்கியத்துவத்தை விளக்கும் வள்ளலாரின் விளக்கமாகும் (Ramalinga Swamigal, 2019).

## ஈதல்

பிறர் துன்பத்தை தன் துன்பம் போல் எண்ணி உயிர்களின் துன்பங்களைக் களைய வேண்டும் என்கிறார் வள்ளல் பெருமான். இதனை,

"ஈ என்று நான் ஒருவர் இடம்நின்று கேளாத

இயல்பும் என்னிடம் ஒருவர்

ஈதிடு என்ற போதவர்க் கிலை என்று

சொல்லாமல் இடுகின்ற திறமும்” (Ramalinga Swamigal, 2019)

மேலும்" தானங் கொடுப்போரைத் தடுத்து நின்றேனோ!

தருமம் பாராது தண்டஞ் செய்தேனோ!

"இரப்போர்க்குப் பிச்சை இல்லையென்றேனோ

பசித்தோர் முகத்தைப் பாராதிருந்தேனோ"

இவ்வரிகளே ஈதல் என்கிற குணம் தனிமனித வாழ்வில் எவ்வளவு இன்றியமையாத ஒன்று என்பதைக் குறிக்கும் தக்கச் சான்றாகும் (Ramalinga Swamigal, 2019).

## ஜீவகாருண்ய ஒழுக்கம்

சீவர்கள் பசி, தாகம், பிணி, இச்சை, எளிமை, பயம், கொலை இவைகளால் துக்கத்தை அனுபவிக்கக் கண்ட போதாயினும், கேட்ட போதாயினும், இவ்வாறு உண்டாகுமென்று அறிந்த போதாயினும் ஆன்ம உருக்கம் உண்டாக வேண்டும்.

"ஜீவகருண்யம் கடவுளருளைப் பெறுவதற்கு முக்கிய சாதனமென்பது மல்லாமல் அந்த அருளின் ஏகதேச விளக்க மென்றும் அறிய வேண்டும்."

"எங்கெங்கிருந்து உயிர் ஏதேது வேண்டினும் அங்கங்கிருந்து அருள்

அருட்பெருஞ்ஜோதி" (அருட்பெருஞ்ஜோதி அகவல்)

"எத்துனணயும் பேதமுறா எவ்வுயிரும் தம்முயிர்ப் போல் எண்ணி"

ஒவ்வொரு தனிமனிதனின் வாழ்வில் ஜீவகாருண்ய ஒழுக்கம் என்பது கடைபிடிக்க வேண்டிய தலைசிறந்த அறமாகும் என்பதை விளக்கும் வள்ளலாரின் பாடல் வரிகள் (Ramalinga Swamigal, 2019).

## திருக்குறளும் திருவருட்பாவும்

அறநெறி கருத்துக்களின் பிறப்பிடமான திருக்குறளும் திருவருட்பாவும் ஒருசேர நற்கருத்துக்களை வழங்கியுள்ளமையை இப்பாடலில் சிறப்பாகக் காணலாம்.

"பாபக் கடற்கோர் படுகடலாம் பாழ்வெகுளிக்

கோபக் கடலில் குளித்தனையே - தாபமுறச்

செல்லா விடத்துச் சினந்தீது செல்லிடத்தும்

இல்லதனில் தீயதென்ற தெண்ணிலையே - மல்லல் பெறத்

தன்னைத்தான் காக்கில் சினங்காக்க என்றதனைப்

பொன்னைப் போல் போற்றிப் புகழ்ந்திலையே - துன்னி

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல என்னுந்

திகழ்வாய் மையும்நீ தெளியாய் - இகழ்வாரை

எவ்வண்ணம் நம்மை இகழ்வார் அறிவோமென

றிவ்வண்ணம் என்னை வெளியிட்டனையே" (Ramalinga Swamigal, 2019)

## நிலையாமையின் விளக்கம்

மண்ணாசை மற்றும் பெண்ணாசையால் மதி கெட்டு தன் நிலை இழந்து அறநெறியிலிருந்து தவறுவதைச் சுட்டிக்காட்டுகிறது வள்ளல் பெருமானின் இப்பாடல்

"புண்ணைக் கட்டிக் கொண்டே அதன்மேல் ஒரு

புடவை கட்டிப் புதுமைகள் காட்டிடும்

பெண்ணைக் கட்டிக் கொள்வார் இவர் கொள்ளிவாய்ப்

பேயைக் கட்டிக் கொண்டாலும் பிழைப்பர் காண்
மண்ணைக் கட்டிக் கொண்டே அழுகின்ற இம்
மடையப் பிள்ளைகள் வாழ்வினை நோக்குங்கால்
கண்ணைக் கட்டிக் கொண்டூர் வழி போம் கிழக்
கழுதை வாழ்வில் கடை எனல் ஆகுமே" (Ramalinga Swamigal, 2019)

## மனிதநேயம்

அறநெறிப்படி நம் வாழ்க்கை அமைய வேண்டும் எனில் இவ்வுலகத்தில் உள்ள அனைத்து உயிர்களையும் தம் உயிர் போல் பாவித்து அவர்களுக்கு வரும் துன்பங்களைக் களைய நாம் பெரும் முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்பதை விளக்குகிறது. இதனை,

"எத்துணையும் பேதமுறா தெவ் வுயிரும்
தம் உயிர் போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்
யாவர் அவர் உளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம் புரியும்
இடம் என நான் தெரிந்தேன் அந்த
வித்தகர் தம் அடிக்கே ஏவல் புரிந்திட என்
சிந்தை மிக விழைந்ததாலோ" (Ramalinga Swamigal, 2019)

## மாயை விளக்க முறையீடு

தனிமனித வாழ்வில் அறநெறியிலிருந்து முறை தவறிச் செல்வதற்கான முக்கிய காரணம் மாயை என்பதாகும். இம்மாயை விலகினால் அறநெறியிலிருந்து விலகாமல் நம்மை நாமே தற்காத்துக் கொள்ள முடியும். இம்மாயைத்திரை விலக இறைவனை இப்படி இறுகப் பற்றிக் கொள்ள வேண்டும் என்பதை விளக்குகிறது. இதனை,

"எழுவகைப் பிறவிகளில் எப்பிறவி எய்துகினும்
எய்துக பிறப்பில் இனி நான்
எய்தாமை எழுதுகினும் எய்திடுக இருமையினும்
இன்பம் எய்தினும் எய்துக
வழுவகைத் துன்பமே வந்திடினும் வருக மிகு
வாழ்வு வந்திடினும் வருக
வறுமை வருகினும் வருக மதிவரினும் வருக அவ
மதி வரினும் வருக உயர்வோ
டழிவகைத் துலகின் மற்றெதுவரினும் வருக அல
தெது போகினும் போக நின்
இணையடிகள் மறவாத மனம் ஒன்று மாத்திரம்

எனக்கடைதல் வேண்டும் அரசே" (Ramalinga Swamigal, 2019)

## விழிப்புணர்வு நிலை

அறியாமையால் உலக மக்கள் மாயையில் சிக்கி அறிவில் தெளிவுநிலை எய்தாமல் பாழ் படுவதை எண்ணி மிகவும் துடிக்கிறார் நம் வள்ளல். இதனை,

"பொய் விளக்கப் புகுகின்றீர் போதுகழிக் கின்றீர்
புலைகொலைகள் புரிகின்றீர் கலகல என்கின்றீர்
கைவிளக்குப் பிடித்தொரு பாழ்ங் கிணற்றில் விழுகின்ற
கலியர் எனக் களிக்கின்றீர் கருத்திருந்தும் கருதீர்
ஐவிளக்கு மூப்பு மர ணாதிகளை நினைத்தால்
அடிவயிற்றை முறுக்காதோ கொடிய முயற்றுலகீர்
மெய்விளக்க எனது தந்தை வருகின்ற தருணம்
மேவிய தீண்டடை வீரேல் ஆவி பெறுவீரே" (Ramalinga Swamigal, 2019)

## உலகர்க்கு உய்வகை

உலக மக்கள் அறநெறியைப் பின்பற்றாமல் தனது வாழ்க்கை முறையை மேற்கொள்வதைக் கண்டு வெகுண்டெழுகிறார் வள்ளல் பெருமான் இதனை,

"பட்டோடு பணியோடு திரிகின்றீர் தெருவில்
பசியோடே வந்தாரைப் பார்க்கவும் நேரீர்" (Ramalinga Swamigal, 2019)
"மாயாமை பிறவாமை வழி என்றும் உணரீர்
மறவாமை நினையாமை வகைசிறி தறியீர்"
"மாமந்த நோயுற்ற குழவியில் குழைந்தீர்
வாழ்க்கையில் அற்ப மகிழ்ச்சியும் பெற்றீர்" (Ramalinga Swamigal, 2019)
"பட்டினி கிடப்பாரைப் பார்க்கவும் நேரீர்
பழங்கஞ்சி ஆயினும் வழங்கவும் நினையீர்" (Ramalinga Swamigal, 2019)

## முடிவுரை

திருவருட்பா முழுவதுமே பல்வேறு அக்கருத்துக்களை உள்ளடக்கி உலகில் உள்ளோர் உயர்ந்த நிலையை அடைய வழிவகை செய்யும் என்பதை பல்வேறு திருவருட்பா பாடல்களின் மூலம் நன்கு உணர முடிகிறது. உலக மக்கள் அனைவரும் உய்ய வேண்டி இறைவனிடத்தில் முறையீடு பல செய்து மக்களிடையே ஆன்ம நேய ஒருமைப்பாட்டு உணர்வு மேலோங்கி அறியாமை இருள் அகன்று அறிவில் தெளிவுநிலை பெறுதலே வள்ளல் பெருமானின் தலையாயக் கொள்கையாக இருந்தது என்பதற்குத் திருவருட்பாவே சாட்சி ஆகும். இத்தகைய அறக்கருத்துக்களைக் கொண்டு சமுதாயத்தில் மறுமலர்ச்சி ஏற்படும் என்பதிலும் எவ்வித ஐயமும் இல்லை என்பதை உணரமுடிகிறது.

## References

Goumareeswari, S, (2002) Thirukkural, Saradha Pathippagam, Chennai, India.

Gunapalasingam, V., Mumthaj Sameem M.S.J., Suresh, R. (2022) A comparative perspective of fact in Thirukkural and Thiruvarutpayan, Indian Journal of Tamil, 3(3), 1–4. https://doi.org/10.54392/ijot2231

Gurunathan, D., Santhakumari, N. (2021) Vallalar's Perception – Nature is Divine, International Research Journal of Tamil, 3(1), 132-139. https://doi.org/10.34256/irjt21114

Ramalinga Swamigal, (2019) Thiruvarutpa, Prema Pathippagam, Chennai, India.

Roopa, M. (2021) The Theological Priciples of Siddhar and Vallalar Songs, International Research Journal of Tamil, 3(S-2), 107-111. https://doi.org/10.34256/irjt21s221

Vijayakumar, B. (2021) Theological principle and doctrine emphasized by Thiruvarutha, International Research Journal of Tamil, 3(S-2), 222-227. https://doi.org/10.34256/irjt21s242

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License